தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

திங்கட்கிழமை, 1975 ஏப்ரல் 21.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Play-grounds for Schools.

*258 *Q.*—Thiru V. THANGAPANDIAN (on behalf of Thiru M. SANKARALINGAM): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of schools under Internal Assessment Scheme which are not provided with minimum play-ground facilities; and

(*b*) the steps taken to get play-grounds for those schools?

பள்ளிகளுக்கு விளையாட்டு இடங்கள்

திரு. வே. தங்கபாண்டியன் (திரு எம். சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) உள் மதிப்பீடு திட்டம் (Internal Assessment Scheme) செயல்படும் பள்ளிகளில், குறைந்தஅளவு தேவையான விளையாட்டு இடங்கள் இல்லாதவை எத்தனை ?

(இ) அப்பள்ளிகளுக்கு விளையாட்டு இடங்கள் பெறுவதற்கு என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) பள்ளிகளில் உள் மதிப்பீட்டுத் திட்டம் செயல்பட குறைந்த அளவு எவ்வளவு விளையாடு மிடம் இருத்தல் வேண்டுமென எதுவும் வரையறுக்கப்படவில்லை. இருப்பினும் இத்திட்டம் செயல்பட்டுவரும் பள்ளிகள், விளையாட்டு வசதியைக் கொண்டதாகவே அமைந்துள்ளன.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு கே. எஸ். கணபதி : துணைத் தலைவரவர்களே, இந்த உள் மதிப்பீட்டுத் திட்டம், 11-ம் வகுப்பிற்கும் புகுத்தப்பட்டு, அதை எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்விற்கும் எடுத்துக்கொள்ளத்தக்க விதத்தில் அரசு வகை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. இப்போது பத்தாம் வகுப்பு வரையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது. இதிலே நாம் வெற்றி கண்டால், பின்னர் எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்விற்கு அதைக் கொண்டுவர முயற்சிக்கலாம். இப்போது அதைக் கொண்டுவர வேண்டுமென்றால், அதற்குப் பல்கலைக் கழகத்தின் அனுமதி வேண்டும். எனவே இப்போதைக்குப் பத்தாவது வரையில் என்ற அளவில் வைத்திருக்கிறோம்.

திரு. கே. எஸ். கணபதி : உள்மதிப்பீடு திட்டம் செயல்படும் பள்ளிகளிலே, "க்ளெரிகல் ஒர்க்" மிக அதிகமாக இருப்பதால், அப்பள்ளியில் பணியாற்றும் ஏதாவதொரு ஆசிரியருக்கு, இப்போது என்.ஸி.ஸி. திட்டத்தில் செய்திருப்பதைப்போல, 18 வேலை நேரங்களை மட்டுமே கொடுத்து, அவர்கள் இந்த வேலையைச் செய்யும்படி வழி செய்ய அரசு முயற்சிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இது பற்றி முழு விவரங்களும் அதன் தன்மைகளும் என்ன என்று இல்லாத நிலையில் இது எப்படி என்று தெரியவில்லை. ஆராய்ந்து பார்க்கும்போது, வேலைப்பளு எப்படி இருக்கின்றது, இப்போது இருக்கின்றவர்களையே வைத்துக் கொண்டு செய்ய முடியுமா என்றெல்லாம் பார்த்துத்தான் முடிவெடுக்க வேண்டும். இன்றுள்ள நிலையில் இரண்டொரு ஆண்டுகள் பார்த்துவிட்டு, பிறகு இதுபற்றி ஆராயலாம்.

Scholarship for Tamil Medium of Instruction.

*259. Q. THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Government have issued any order to the effect that the students who opted for Tamil medium of instruction in Colleges should refund the amount of scholarship they have received therefor; and

(b) if so, the details thereof?

தமிழ் மூலம் பயிலுவதற்கு உதவித் தொகை

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்: